# திராவிடப் போராளிகள்

43 ■ வழக்கறிஞர் அருள்மொழி

**ம**றைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...

## அலர்மேலு : முதல் 30 பேரில் ஒரே பெண் தலைவர்



ஓவியம் : ரவி பேலட்

அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் திராவிடப் போராளிகளில் மூத்தவர் என்று சொல்வதற்கான தரவுகள் அவர் பங்கேற்ற நிகழ்வுகளைப் பற்றிய குறிப்புகளில்தான் கிடைக்கின்றன.

அவற்றிலிருந்து, அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், சென்னை எழும்பூர் பகுதியில் வாழ்ந்தவர். வசதி வாய்ப்புகள் நிறைந்த குடும்பப் பின்னணி உடையவர். கடவுள் நம்பிக்கையும் காந்தியக் கொள்கையில் ஈடுபாடும் கொண்டவர்.

பார்ப்பனர்களின் சாதி ஆணவப் போக்கினை தன் அனுபவங்களால் உணர்ந்தவர். அதனால் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தில் அவருக்கு நாட்டம் ஏற்பட்டுள்ளது. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் முதல் அமைப்புக் கூட்டத்தில் பங்கேற்ற முப்பது பேரில் அவர் மட்டுமே பெண் தலைவர் என்பது அவரது ஆளுமைக்குச் சான்று.

### மூன்று செய்திகள்

அவரைப்பற்றிய மூன்று செய்திகள் மிக முதன்மையானவை.

1914 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள், சாதி அமைப்பைத் தடை செய்ய வேண்டுமென்றும், பெண் கல்வியை ஊக்கப்படுத்தவும்,பெண்களின் சொத்துரிமை, சாதி மறுப்புத் திருமணம் செய்யும் உரிமை ஆகியவற்றைக் காக்க சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை முன்மொழிந்து, வலியுறுத்தி உரையாற்றினார் என்ற செய்தி, 1914 ஆம் ஆண்டு டிசம்பர் 'நியூ இந்தியா' ஏட்டில் வெளிவந்ததாக ஒரு மின் ஆய்வு நூல் குறிப்பிடுகிறது. 'நியூ இந்தியா' என்ற நாளிதழை நடத்தியவர் அன்னி பெசன்ட் அம்மையார்.

1927 ஆம் ஆண்டு 'சுதேசமித்திரன்' ஏடு அம்மையாரை மரியாதை குறைவாகக் குறிப்பிட்டதும் பின்னர் அதற்கு சமாதானம் கூறியதும், குறித்த முழுமையான தகவல்களை இன்றைய தலைமுறை கட்டாயம் தெரிந்துகொள்ள வேண்டும்.

காங்கிரசு இயக்கத்திலும் காந்தியார் மீதும் மதிப்பு கொண்டிருந்த, வசதிபடைத்த, பார்ப்பனரல்லாத ஒருவருக்கு, 'சுதேசமித்திரன்' பத்திரிகை எப்படிப்பட்ட அவமரியாதையை இழைத்தது என்பதை, 1927 அக்டோபர் 'திராவிடன்' இதழில் 'பிராமணர்களும் பெண்மானமும்' என்ற தலைப்பில் அவரே எழுதிய கட்டுரை விளக்குகிறது.

சாதி ஏற்றத்தாழ்வும் சாதிக்கு ஒரு நீதியும் சொல்லும் சனாதனமும் என்பது சாதியமைப்பின் மேல்நிலையில் இருப்பவர்களுக்கு அளவற்ற மரியாதையைக் கொடுக்கும். மற்றவர்களை மனிதராகவே மதிக்காது என்பதற்கு இந்த நிகழ்வே எடுத்துக்காட்டு.

### 'சுதேசமித்திரன்' சாதிப் பற்று

எந்தக் கூட்டத்தில் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் பேசியதை 'சுதேசமித்திரன்' பத்திரிக்கை மரியாதையின்றி எழுதியது என்ற விவரத்தையும் அம்மையாரே கூறுகிறார்.

"மித்திரன் பத்திரிகை ஒன்றிருக்க ஒன்றெழுதி வருகின்றது. அவமரியாதையிலும் கை எழுத ஓடுகின்றது. மகாத்மா காந்தி அவர்களுக்கு 9.9.27 இல் பெண்கள் பணமுடிப்பு கொடுத்த சமயத்திலும், ஸ்ரீமதி அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள் வந்தனம் கூறினாள் என்று ஒரே ஒரு வாக்கியத்தில் எழுதியது. அவ்வாக்கிய முடிவும் அவமதிப்பிலே முடிந்தது. இதையெல்லாம் விபரீதமாய் நினைக்கப்படாதென்றாலோ, நானும் மற்றவர்களும் அப்படியே விபரீதமாய் நினைக்காதபடி, லேடி சதாசிவ அய்யர் காந்தியைப் புகழ்ந்து பேசினாள், டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் காந்திக்கு நல்வரவுப் பத்திரம் வாசித்துக் கொடுத்தாள், பிரம்மஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார் மொழிபெயர்த்தான் என்று எதார்த்தமாய் எல்லாரையும் ஏகவசனமாய் ஏற்றத்தாழ்வின்றி அவசியம் எழுதியிருக்க வேண்டும். அப்பொழுது என்னைப்பற்றி எழுதியதும் எதார்த்தமென்று நினைப்பேன். மற்றவர்களும் நினைப்பார்கள். என்னை மட்டும் 'வந்தனம் கூறினாள்' என்று ஏகவசனமாய் எழுதவேண்டியது என்ன??."

ஒருவேளை முத்துலட்சுமி அம்மையாரையும் மரியாதைக் குறைவாக எழுதி இருந்தால் அலர்மேலு மங்கைத் தாயாருக்கு வருத்தம் வந்திருக்காதோ என்று நம் மனதில் ஓடும் கேள்விக்கு அடுத்த வரியில் அவரே பதில் சொல்கிறார்.

"ஸ்ரீமதி, சகோதரி முத்துலட்சுமி அம்மாள் அவர்களையும் மற்றவர்களையும் அகௌரவப்படுத்த வேண்டுமென்பது என் நோக்கமல்ல. சூது வாதின்றி எல்லாரையும் கௌரவப்படுத்த வேண்டுமென்பதே என் நோக்கம். அவைகளை எடுத்துக் காட்டாவிட்டால் எப்படித் தெரியும்?"

இதற்கும் கூட சிலர் அது அந்தக் காலத்துப் பத்திரிகை மொழி என்று சமாதானம் சொல்ல முயல்வார்கள். ஆனால் உண்மை அதுவல்ல என்கிறார் அலர்மேலு மங்கைத் தாயாரம்மாள். அதேபோல் மரியாதை என்பது எல்லோருக்கும் உரிமையானது என்றும் கூறுகிறார்.

"சுதேசமித்திரனைத் தவிர வேறெந்தப் பத்திரிகையும் ஏகவசனமாய் எழுதுவதில்லை. பிராமணர்களைத் தவிர மற்றெவரையும் அவள் இவள் என்று ஏகவசனத்தில் பேசுவதுமில்லை. பிராமணர்கள் தமிழ் பேசவும் எழுதவும் தெரியாதவர்களா? வெளிப்பட வேண்டும். எந்த ஜாதியாயினும், எந்த மதமாயினும், ஆணாயினும், பெண்ணாயினும், உயர்வாயினும், தாழ்வாயினும், யாராயினுஞ்சரி கௌரவமாக எழுதுவதல்லவோ ஒரு பத்திரிகையின் லக்ஷணம்".

### சனாதன மித்திரன் பரம்பரை

இந்தியப் பெண்களுடைய மரியாதையை மிஸ் மேயோ குறைத்துவிட்டார் என்று புலம்பிய 'சுதேசமித்திரன்', இந்திய (பார்ப்பனரல்லாத) பெண்களுக்கு என்ன மரியாதை கொடுத்தது என்ற அம்மையாரின் கேள்வி 'சுதேசமித்திரனின்' சாதி முகத்திரையைக் கிழித்துக் காட்டியது. மேலும் 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அலர்மேலு மங்கை தாயார் புதியவருமல்ல என்ற உண்மையையும் அம்மையார் அம்பலப்படுத்தினார்.

"இத்தேசத்திற்கு முற்றும் சம்பந்தமில்லாத ஓர் அமெரிக்க தேசப்பெண் இராஜதந்திரத்திலே இத்தேசப் பெண்களின் பெருமையை குறைவுபடுத்தினார் என்று ஆகாயமளவுமட்டும் எட்டி எட்டிக் குதிக்கின்றவர்கள், இத்தேச மாதரின் மரியாதை விஷயத்திலும் கவனிக்க வேண்டாமா? உள்ளதைச் சொன்னால் உடம்பெரியலாம். 1903 வருஷம் முதற்கொண்டு மித்திரன் பத்திரிகைக்கு விஷயதானத்திலே சம்பந்தப்பட்டுள்ளேன்.

பொதுவாழ்வில் ஈடுபடும் பெண்களை குறிப்பாக ஜாதி, மதம், ஆணாதிக்கம் இவற்றுக்கு எதிரான தத்துவங்களை முன்னெடுக்கும் பெண்களை இழிச்சொற்களால் அவமானப் படுத்துவது தெய்வபக்தி, தேசபக்தி என்ற பெயரால் இன்றும் அரசியல் செய்பவர்களின் வரலாறு என்பதற்கு இதைவிட, வேறு உதாரணம் தேவையில்லை.

ஏறக்குறைய 25 வருட காலமாய் என் சுய நன்மையை வெறுத்து பொது நன்மையை நாடி வேலையும் செய்தேன். ஆயினும் 'பெண்மானம்' என்பதைக் கவனியாத பெரியோர்கள் ஓர் பெரியோர்களா? இன்று என்னை அவள் இவள் என்று எழுதவும் பேசவும் முன்வந்தவர்கள் நாளை எவரையும் கேவலமாய் எழுத ஏன் துணியார்கள்?

இவர்களின் தேசாபிமானம் பற்றி எள்ளி நகையாடுகிறது அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் கட்டுரை.

மதுரை ஸ்ரீஜார்ஜ் ஜோசப் அவர்கள் சொன்னபடி பிராமணர்களுக்கு அநேகமாய் சுயஜாதி அபிமானமே அவர்களுடைய தேசாபிமானம். சுயராஜ்யம் வந்தால் நம்மை எந்நிலையில் வைப்பார்களோ? தேசம் எந்நிலையில் இருக்குமோ தெரியவில்லை. சுயராஜ்யமும் வரவேண்டியதே; வருவதற்குமுன் முக்கியமாய் பிராமணர்களும் மற்றவர்களும் திருந்த வேண்டும். கதர் உடுத்தி காந்திக்கு ஜே! என்று கத்திக் கதறி கல்லெடுத்தெறிகின்றார்கள். காந்தியடிகள் பெயரை ஒட்டியே இவ்வளவு விபரீதம் நடக்கின்றது. காந்தியடிகள் செவிக்கு அவ்வக்கிரம் எட்டுமோ எட்டாதோ ஈசனே அறிய வேண்டும். காந்தியடிகளை அவதாரமாக்கினும் அவர்சொன்னபடி நடப்பவர்தான் இலர். நிற்க...."

இந்தக் கட்டுரையின் முடிவில் இன்னொரு நிகழ்வைப் பற்றியும் அம்மையார் குறிப்பிடுகிறார்.

"நுங்கம்பாக்கம் (27.9.27) மீட்டிங்கிலும் நான் பேசினபோது பிரஸிடென்ட்டாய் இருந்த பிராமணர் எம்.ஏ.எல்.டி அய்யங்கார் அவர்களும் சபையாருக்கு என்னைப்பற்றி அறிவிக்கும்போது 'பேசுவாள்' என்றே சொன்னார். என்ன விபரீதம் பாருங்கள்".

இந்த விபரீதத்தைத்தான் இன்றைக்குச் சனாதனம் என்ற பெயரில் மீண்டும் நிறுவத் துடிக்கிறது மித்திரன் பரம்பரை என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

### மாண்டிசோரி பள்ளி

அலர்மேலு மங்கைத் தாயாரம்மாளின் இறுதிக் காலம் குறித்துக் கிடைத்துள்ள மற்றொரு செய்தியும் அவரது பேருள்ளத்துக்குச் சான்றாகி நிற்கிறது.

சென்னையின் மையப் பகுதியான சிந்தாதிரிப்பேட்டையில் அலர்மேலு மங்கை தாயாரம்மாள் மாண்டிசோரி பள்ளி என்ற பெயரில் தொடக்கப் பள்ளி ஒன்று இன்றும் கல்விப் பணியாற்றி வருகிறது. ஏற்கெனவே செயல்பட்டு வந்த அந்தப் பள்ளியின் மேம்பாட்டுக்காகத் தனது இடத்தை அலர்மேலு மங்கை தாயாரம்மாள் தானமாக வழங்கியதாகவும் அதனால் அவரது பெயர் பள்ளிக்குச் சூட்டப்பட்டதாகவும் பள்ளி நிர்வாகி ஒருவர் கூறினார்.

தொட்டனைத் தூறும் மணற்கேணியாக அலர்மேலு மங்கைத் தாயாரின் பதிவுகள் அங்கும் இங்குமாகக் கிடைக்கின்றன. சுயநன்மையை வெறுத்துப் பொது நன்மையை நாடி பணியாற்றிய திராவிடப் போராளிகளின் முன்னோடியான அவரது வாழ்க்கைச் செய்திகளை முழுமையாக வெளிக்கொணர வேண்டியது நமது கடமையாகும்.

(வருவார்கள்...)

---

## ஒடிசாவில் பெருமை சேர்க்கும் தமிழர்



தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் வெளி மாநிலங்களில் ஆட்சிப்பணி அதிகாரிகளாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு பாராட்டப்படுகின்றனர். அந்த வகையில் ஒடிசா மாநிலத்தில் மிகச் சிறப்பாகச் செயல்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ் அதிகாரி வி.கே. பாண்டியன், அந்த மாநிலத்தில் அமைச்சர் அந்தஸ்தில் பணியாற்றத் தொடங்கியுள்ளார்.

ஐ.ஏ.எஸ் அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தபோது, அவர் பிஜூ ஜனதா தளம் கட்சிக்கு ஆதரவாகச் செயல்படுவதாகக் கூறி பாரதிய ஜனதா கட்சியினர் அவர் வீட்டின் மீது 2018 ஆம் ஆண்டு தாக்குதல் நடத்தினர்.

பிஜூ பட்நாயக்கின் தனிச்செயலாளராக இருந்த இவரின், விருப்ப ஓய்வுக்கு ஒன்றிய அரசு அனுமதி அளித்த நிலையில், ஓய்வுபெற்ற அடுத்த நாளே பட்நாயக் அமைச்சரவையில் அமைச்சர் அந்தஸ்தில் பொறுப்பேற்றுள்ளார்.

அரசின் திட்டங்களை ஒருங்கிணைக்கும் '5T' எனப்படும் துறை அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஏற்கெனவே ஒடிசா மாநிலத்தில் பல்வேறு துறைகளின் தலைமைப் பொறுப்புகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆர்.பாலகிருஷ்ணன் செயல்பட்டுப் பெருமை சேர்த்தார். தற்போது வி.கே.பாண்டியனின் பணியும் சிறக்க வேண்டும். தமிழ் மண்ணுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

## ஃப்ளாஷ்பேக்





### கலைஞரின் ஆறுதல்!

1995 ஆம் ஆண்டு தவத்திரு குன்றக்குடி அடிகளார் மறைந்த பொழுது, மறுவாரத்தில் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் குன்றக்குடிக்கு வருகை தந்து நமக்கு ஆறுதல் தெரிவித்ததுடன், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் புகைப்படத்துக்கு மாலை அணிவித்தும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களின் சமாதியில் மலர் வளையம் வைத்தும் மரியாதை செலுத்தினார்கள்.

-குன்றக்குடி ஆதீனம்,
தவத்திரு பொன்னம்பல அடிகளார் .

இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in


## கருவூலம்

### ஆளுநருக்கு எதிர்ப்பு

**1958 பிப்ரவரி 8 ஆம் தேதி, சட்ட மன்றத்தில் ஆளுநர் உரையைக் கழகம் புறக்கணித்தது. அதற்கு முன்பு அறிஞர் அண்ணா ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். "வடநாட்டைச் சேர்ந்தவர்களை இந்த மாநிலத்தின் ஆளுநராக நியமிப்பதற்கு எதிராக, இந்த நாட்டு மக்கள் தெரிவித்திருக்கும் உறுதியான எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் வடநாட்டவரையே ஆளுநராக நியமிக்கும் கொள்கையை ஆட்சேபிக்கும் வகையில் சட்டசபை கூடும் நாளில் ஆளுநர் உரையாற்றும்போது அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை என்று தி.மு.கழக சட்டசபைக் கட்சி ஒருமனதாக முடிவு செய்கிறது" என அறிவித்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 300




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131